**அ.வ.எண்.455/2019**

**நாள்: 31.03.2023**

**வா.சா. 1 நடராஜன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

காலநீடிப்பு வாசாஆ.3 ல் யாதொரு சாட்சி கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் கையெழுத்து போடவில்லை. வாசாஆ.2 காலநீடிப்பில் கிருஸ்ணன் என்ற சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். நான் ஏறக்குறைய 3 ஆண்டுகள் கடந்த நிலையில் தான் வழக்கு போட்டுள்ளேன் என்றும் இடைப்பட்ட காலத்தில் பிரதிவாதியை அணுகினேனா என்றால் கேட்டேன். வழக்கில் மாற்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். காலநீடிப்பு ஆவணம் தன்னிச்சையாக நானாக எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை மூலமாக தான் கொடுத்தேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒப்பம் எஸ்.நாகராஜன்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.(பொறுப்பு)

<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.எஸ்.நாகராஜன், எம்.எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.455/2019**

**நாள்: 31.03.2023** **வா.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்குமார் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**<u>முதல் விசாரணை –</u>**

சத்தியமாக சொல்கிறேன் . பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான்சொன்னது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வாசாஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் நான் 2 வது சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். இ.செந்தில்குமார் என்பவர் முதல் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். மேற்படி ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்னார் என்று அடையாளம் காட்டிய இடத்தில் கையெழுத்து போட்டுள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை வாதிதரப்பில்</u>

ஒத்தி வைக்கப்பட்டது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒப்பம் எஸ்.நாகராஜன்
கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.(பொறுப்பு)